பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 28 திங்கட்கிழமை 13.09.2021 கதிர் 176

## ஊரடங்கு உத்தரவை மீறிய 737 பேர் கைது!

நாட்டில் இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 737 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் இதுவரையில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களின் ☞2

# பொறுப்புக் கூறலுக்குச் சம்மதிக்கும் கோட்டாவின் போக்குக்கு வரவேற்பு!

## ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் ஜெனிவா அமர்வில் இன்று அறிவித்தார்

**இலங்கையில் பொறுப்புக்கூறலை நிலைநாட்டும் விதத்தில் ஐ.நாவுடன் சேர்ந்து பணியாற்ற உறுதிபூண்டு இருப்பதாகவும், அதற்குத் தேவையான நிறுவன ரீதியான சீரமைப்புகளைச் செய்ய தயாராக இருப்பதாகவும், இலங்கையின் ஜனாதிபதி கடந்த ஜூனில் விடுத்த அறிவிப்பை வரவேற்கிறோம். இது தொடர்பில் காத்திரமான - மிகத் திடமான நடவடிக்கைகளை யதார்த்தத்தில் இலங்கை அரசு செயல்முறையாக நடைமுறைப்படுத்துவதை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.**

**- இவ்வாறு இன்று ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் நாற்பத்தி எட்டாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சலி பச்சலட் அம்மையார் தெரிவித்திருக்கிறார்.** ☞2



## மன்னார் பிரதேச சபை தவிசாளர் பதவி நீக்கம்

### ஆளுநர் நடவடிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப்.13

மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் முஜாகீர் அதிகார வரம்பை மீறிச் செயல்பட்டார் எனத் தெரிவித்து வடக்கு மாகாண ஆளுநரால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பாவனையில் ☞2

## அரசை அழுத்துகின்ற ஐ.நா. ஆணையரின் அறிக்கையை வரவேற்கின்றது கூட்டமைப்பு

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



ஜெனிவாவில் இன்று வெளியிடப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை சம்பந்தமான வாய்மூல முன்னேற்ற அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது எனக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ☞2



கொரோனாத் தொற்றால்

## பிறந்து நோள்களான குழந்தை உயிரிழப்பு

பலாங்கொடை வைத்தியசாலையில் பிறந்து 6 நாள்களான குழந்தை ஒன்று கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளது. ☞2

## இலங்கையில் 'டெல்டா' கோரத்தாண்டவமாடும்

### சமூகத்தில் இன்னமும் வைரஸ் தொற்றாளர்கள்; வைத்திய நிபுணர் ஜீவந்தர அபாய எச்சரிக்கை



இலங்கையில் டெல்டா வைரஸ் மேலும் பரவக் கூடிய அச்சுறுத்தல் நிலை இருக்கின்றது. தற்போதும் அடையாளம் காணப்படும் கொரோனா வைரஸ் தெற்றாளர்கள் டெல்டா தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளதால் மிகவும் வேகமாக டெல்டா வைரஸ் பரவக்கூடும்.

- இவ்வாறு அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத்துறைப் பணிப்பாளர் ☞2

வவுனியா மாவட்டத்தில்

## மேலும் 44 பேருக்கு கொரோனா உறுதி

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் மேலும் 44 பேருக்கு கொரோனாத் தொற்று இன்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப்பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள் ☞2

## கப்ரால் வெளியே; கெட்டகொட உள்ளே

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை ஏற்பதற்காக நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்தார். ☞2



## கோப்பாய் ஓ.ஐ.சி. அதிரடி இடமாற்றம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பி.வீரசிங்க, உடன் நடைமுறைக்கு வரும் வகையில் களனி பொலிஸ் பிராந்தி ☞2

## யாழ். மருத்துவ பீடத்துக்கு புதிய பீடாதிபதி நியமனம்



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பீடாதிபதியாக வைத்திய கலாநிதி இ.சுரேந்திரகுமாரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மருத்துவ பீடத்தின் தற்போதைய பீடாதிபதியும், சத்திர சிகிச்சை நிபுணருமான ☞2

## பொறுப்புக்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தொடர்பான விடயத்தில் அவர் குறிப்பிட்ட முக்கிய விடயங்களின் சாராம்சம் வருமாறு:-

கொரோனாத் தொற்றுத் தாக்கம், இராணுவமயப்படுத்தல், பொறுப்புக்கூறலை நிலைநாட்டத் தவறியமை ஆகியவை நாட்டில் அடிப்படை மனித உரிமைகள், சிவில் நடவடிக்கைகளுக்கான சமூக கட்டமைப்புகளுக்குரிய இடைவெளி, ஜனநாயக நிறுவனங்கள் மற்றும் பேண்தகு அபிவிருத்தி ஆகியவற்றில் பெரும் பாதிப்புத் தாக்கத்தைச் செலுத்துவதாக தெரிகின்றது

நாட்டில் உணவுப் பாதுகாப்பு மற்றும் விலை கட்டுப்பாடு ஆகியவற்றின் பெயரில் கடந்த 30 ஆம் திகதி அவசரகால நிலைமை கொண்டுவரப்பட்டு இருக்கின்றது. இது சிவில் செயற்பாட்டில் இராணுவமயப்படுத்தல் செயற்பாட்டையும் தலையீட்டையும் மேலும் அதிகரிக்கச் செய்யும் என்று கருதுகிறோம். அதனால் இந்த நிலைமையை உன்னிப்பாக கவனிக்கிறோம்.

சில சிவில் சமூகத் தலைவர்களுடன் ஜனாதிபதி சமீபத்தில் நடத்திய சந்திப்பை நாங்கள் ஆர்வத்துடன் நோக்குகிறோம்.

துரதிஷ்டவசமாக மனித உரிமைகள் பாதுகாவலர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் காணாமல் போனவர்களின் குடும்பங்கள் மீதான கண்காணிப்பு, அச்சுறுத்தல் மற்றும் நீதித்துறைத் துன்புறுத்தல் ஆகியவை தொடர்கின்றன. அரசாங்கக் கொள்கைகளை விமர்சிக்கும் மாணவர்கள், கல்வியாளர்கள், மருத்துவர்கள் மற்றும் மதத் தலைவர்கள் துன்புறுத்தப்படுவது மோசமான அளவுக்கு விரிவடைந்துள்ளது. பல அமைதியான போராட்டங்கள் மற்றும் நினைவு கூரல்கள் அதிகப்படியான பலம் பிரயோகிக்கப்பட்டுத் தடுக்கப்பட்டுள்ளன. ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்தல், அவர்களைத் தனிமைப்படுத்தல் மையங்களில் முடக்குதல் போன்றவை தொடர்கின்றன.

சிவில் சமூக குழுக்கள் மீதான புதிய விதிமுறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அடிப்படை சுதந்திரங்கள் மீதான கட்டுப்பாடுகளை அவை மேலும் கடுமையாக்கும் எனப் பரவலாக அஞ்சப்படுகின்றது.

அடிப்படை மனித உரிமை வழக்குகள் பலவற்றின் நீதித்துறை செயற்பாட்டின் மீது செய்யப்பட்ட தலையீடுகள் குறித்து நான் கவலைப்படுகிறேன். 2008 - 2009 ஆம் ஆண்டுகளில் 11 பேர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது என்று சட்டமா அதிபரின் முடிவும் இதில் அடங்கும்.

2011 ஆம் ஆண்டில் அரசியல்வாதி ஒருவரைக் கொன்ற குற்றத்திற்காக மரண தண்டனை பெற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி சமீபத்தில் வழங் கிய பொதுமன்னிப்பு, நாட்டில் சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதி செயல்முறையில் மீதான நம்பிக்கையை சிதைக்கும் அபாயத்தை ஏற்படுத்தி உள்ளது.

பொலிஸ் காவலில் இடம்பெறும் கொலைகள் மற்றும் போதைப்பொருள் குற்றக் குழுக்களுடன் பொலிஸார் நடத்தும் 'என்கவுண்டர்கள்' மற்றும் சட்ட நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளின் தொடர்ச்சியான சித்திரவதைகள் மற்றும் மோசமான நடத்தைகள் குறித்து நாங்கள் பெரிதும் கவலைப்படுகிறோம்

தனிநபர்களை இரண்டு ஆண்டுகள் வரை விசாரணையின்றி தன்னிச்சையாக நிர்வாகக் காவலில் வைப்பதற்கு வழி செய்யும் தீவிரப் போக்கு விதிமுறைகள் கடந்த மார்ச் மாதத்தில் கொண்டுவரப்பட்டமை கவலையைத் தருகின்றது. எனினும், இந்த விதிமுறைகளுக்கு எதிராக நீதிமன்றம் தடையுத்தரவு விதித்திருப்பதை அவதானித்து இருக்கின்றோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாக கருதப்பட்டு தண்டனை அனுபவித்து வந்த 16 கைதிகள் தண்டனை முடியும் தறுவாயில் மன்னிக்கப்பட்டனர். இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் தங்கள் மீதான வழக்குகள் குறித்து மறு ஆய்வு செய்வதற்கு விண்ணப்பிக்கக்கூடிய ஓர் ஆலோசனை வாரியம் நிறுவப்பட்டுள்ளது. மேலும் இந்த நீண்டகால வழக்குகளுக்கு விரைவான தீர்வைக் காண வேண்டும் என நான் வலியுறுத்துகிறேன்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்கான தனது நோக்கத்தை அரசாங்கம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. இதற்காக அமைச்சரவைத் துணைக் குழு ஒன்றையும் அது அமைத்துள்ளது. ஆயினும் தொடர்ந்து மக்களைக் கைது செய்யவும் தடுத்து வைக்கவும் இச்சட்டத்தை பயன்படுத்துவது குறித்து நான் மிகவும் கவலைப்படுகிறேன். சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் இச்சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தின் முன் நம்பகமான ஆதாரங்கள் வைக்கப்படாத நிலையில் 16 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அதேபோல ஆசிரியரும் கவிஞருமான அஹ்னாவ் ஜஸீம் 2020 மே முதல் குற்றச்சாட்டு ஏதுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கான உடனடித் தடையை நான் வலியுறுத்துகிறேன்.

இழப்பீடுகளுக்கான தேசியக் கொள்கை கடந்த ஓகஸ்டில் அங்கீகரிக்கப்பட்டது. அதேநேரம் இழப்பீட்டு கொடுப்பனவுகள் மற்றும் நல்லிணக்க திட்டங்கள் தொடர்ந்தன. காணாமல் போனோருக்கான அலுவலகம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. கிளிநொச்சியில் ஆறாவது பிராந்திய அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. ஆனால் அது பாதிக்கப்பட்டவர்களிடையே நம்பிக்கையை ஊக்குவிக்க வேண்டும். வெளிப்படையான - பாதிக்கப்பட்டோரை மையப்படுத்தப்பட்ட - பாலின உணர்திறன் அணுகுமுறைகளின் முக்கியத்துவத்தை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். அதேவேளை இழப்பீட்டுத் திட்டங்கள் விசாலமான உண்மை மற்றும் நீதி நடவடிக்கையுடன் அமைந்திருக்கவேண்டும்

இந்தப் பின்னணியில் கவுன்ஸிலின் 46/01 இலக்க தீர்மானத்தின் பொறுப்புக்கூறல் தொடர்பான அம்சங்களை ஏற்படுத்துவதற்கான எனது அலுவலகத்தின் பணி தொடங்கி உள்ளது. ஓர் ஆரம்ப குழுவின் ஆள்சேர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே தரப்பட்ட ஒரு லட்சத்து 20 ஆயிரம் தனித் தனி ஆவணங்களுடன் ஒரு தகவல் மற்றும் ஆதார களஞ்சியத்தை நாங்கள் உருவாக்கி உள்ளோம். இந்த ஆண்டு, முடிந்த வரை தகவல் சேகரிப்பைத் தொடங்குவோம். இதற்குத் தேவையான நிதி உதவிகளை உறுதி செய்யுமாறு உறுப்பு நாடுகளை நான் கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலம் எனது அலுவலகம் இந்த வேலையை முழுமையாகச் செயல்படுத்த முடியும்.

இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதில் நம்பகமான முன்னேற்றத்தை பெற வேண்டும் என நான் நினைக்கிறேன். அதற்கு உதவும் வகையில் இலங்கையின் முன்னேற்றங்கள் தொடர்பில் தொடர்ந்து கவனம் செலுத்தவும் கவுன்ஸில் உறுப்பினர்களை நான் வேண்டுகிறேன்.- என்றார்

## மேலும்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில இன்று காலை வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் மேலும் 44 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(100)

## ஊரடங்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொத்த எண்ணிக்கை 70 ஆயிரத்து 694 ஆக அதிகரித்துள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## மன்னார்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்ததாகக் கூறப்படும் ஓர் உழவு இயந்திரம் பொலிஸாரால் குற்றச்சாட்டு ஒன்றின் அடிப்படையில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட சமயம் மன்னார் பிரதேச சபையின் தவிசாளர், அது பிரதேச சபைக்குரியது எனத் தவறாக உரிமை கோரும் கடிதம் வழங்கி நீதிமன்றில் இருந்து உழவு இயந்திரத்தை விடுவித்து, அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார் என ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இதனை ஆராய்ந்த வடக்கு மாகண உள்ளூராட்சி ஆணையாளரின் பரிந்துரையின் பெயரில் வடக்கு மாகாண ஆளுநர் விசேட வர்த்தமானி அறிவித்தலின் பெயரில் தவிசாளரின் பதவியை வெறிதாக்கியுள்ளார்.

இதேநேரம் தவிசாளர் பதவி மட்டுமன்றி அவரின் உறுப்பினர் பதவியும் சேர்த்தே வெறிதாக்கப்பட்டுள்ளது.

## கோப்பாய்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

அவர் மீது தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்த முறைப்பாடுகளை அடுத்து இந்த இடமாற்றம் பொலிஸ் உயர்மட்டத்தால் வழங்கப்பட்டுள்ளது.

களனி பொலிஸ் பிராந்தியத்தில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பதவி நிலையிலிருந்து தரமிறக்கப்பட்டு சூப்பர் நியூமரரி நிலை என்ற வகையில் அவர் இடமாற்றப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களின் அச்சுறுத்தல், கையூட்டுப் பெறல், முறைப்பாடுகளைத் தட்டிக்கழித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில் பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

## யாழ்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர் எஸ் ரவிராஜின் பதவிக் காலம் நிறைவு பெற்றதையடுத்து புதிய பீடாதிக்கான தேர்தல் இன்று காலை இடம்பெற்றது.

மருத்து பீட, பீடச் சபை உறுப்பினர்களுடையிலே இடம்பெற்ற வாக்கெடுப்பில் வைத்திய கலாநிதி இ.சுரேந்திரகுமாரன் 22 வாக்குகளைப் பெற்று 4 மேலதிக வாக்குகளால் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் கொரோனாத் தடுப்புச் செயலணியின் இணைப்பாளராகப் பதவி வகிக்கும் வைத்திய கலாநிதி இ. சுரேந்திரகுமாரன், மருத்துவ பீட சமுதாய மருத்துவத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆவார். இவர் சமுதாய மருத்துவத்துறையின் தலைவராக 2012 முதல் 2019 வரை பதவி வகித்துள்ளார்.

## கப்ரால்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.பி. பதவியை இராஜினாமா செய்வதற்கான கடிதத்தை இன்று காலை நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கப்ரால் கையளித்தார்

இந்தஎம்.பி. பதவிக்குவெற்றிடத்துக்கு ஜயந்த கெட்டகொட நியமிக்கப்படவுள்ளார்.

கெட்டகொடவுக்கு பிரதி அமைச்சுப் பொறுப்பொன்று வழங்கப்படவுள்ளது.

## பிறந்து 6......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த குழந்தை சுவாசப் பிரச்சினை காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளது.

இந்நிலையில், குழந்தை நேற்று உயிரிழந்துள்ளது.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குழந்தைக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## இலங்கையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட வைத்திய நிபுணர் சந்திம ஜீவந்தர.

நாட்டின் தற்போதைய கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் நிலை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

டெல்டா வைரஸ் நாட்டில் வேகமாகப் பரவிக் கொண்டுள்ளது. இறுதியாக நாம் முன்வைத்த ஆய்வறிக்கையில் கூட தொற்றாளர்களில் 95.8 வீதமானோர் புதிய டெல்டா வைரஸ் தொற்று தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை வெளிப்படுத்தியிருந்தோம்.

இவ்வருடம் ஏப்ரல் மாதமளவில் இலங்கையில் டெல்டா வைரஸ் பரவல் கண்டறியப்பட்ட பின்னர் அன்று தொடக்கம் நாளாந்தம் டெல்டா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருகின்றது.

இவ்வாறான நிலையில் நாடு மீண்டும் நீண்ட முடக்கத்துக்குச் சென்றுள்ள நிலையில் நிலைமைகளைக் கட்டுப்படுத்த இது சாதகமாகவே உள்ளது. அதில் மாற்றுக் கருத்து இல்லை.

ஆனால், குறித்த ஒரு மாதகாலத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என்பதற்காகவோ அல்லது கொரோனா மரணங்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என்பதற்காகவோ நாடு பாதுகாப்பான நிலையில் உள்ளது எனக் கருதுவது தவறானதாகும்.

நாட்டில் இன்னமும் டெல்டா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் நிலையே காணப்படுகின்றது. அதேபோல் டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கும் வரையில் வைரஸ் பரவல் அச்சுறுத்தல் நிலைமையே இருக்கும்.

டெல்டா வைரஸ் வேகமாகப் பரவும் தன்மையைக் கொண்டுள்ள காரணத்தால் நாம் வைரஸ் தொற்றில் இருந்து முழுமையாக விடுபடுவது சவாலான விடயமே.

எனவே, மக்கள் இப்போது மட்டுமல்ல தொடர்ச்சியாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி தமது மற்றும் அயலவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் - என்றார்.

## அரசை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விசேடமாக இலங்கை அரசு, ஐ.நா. மனித உரிமைகள் சபையோடு இணங்கிச் செயற்படும் என்று ஜனாதிபதி கொடுத்த உத்தரவாதத்தைச் செயலில் காண வேண்டும் என்று ஆணையாளர் வலியுறுத்தியுள்ளதை நாம் அவதானித்துள்ளோம்.

இலங்கையில் அண்மையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தையும், வேறு சட்ட ஆட்சிக்கு முரணான விடயங்களையும் ஆணையாளர் சுட்டிக் காட்டியதையும் வரவேற்கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி சம்பந்தமான திடமான நிலைப்பாட்டுக்காக ஆணையாளருக்கு நன்றி செலுத்துகின்றோம்.

அதேபோல், சாட்சியங்களைச் சேகரித்தல் மற்றும் பாதுகாத்தலுக்கான பொறிமுறை ஏற்படுத்துவது சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் விரைவில் நிறைவுறும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

வேலைவாய்ப்பு
சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை.
தொடர்புகளுக்கு - 076 740 3814

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# தமிழகத்தின் புதிய ஆளுநர்

தமிழ்நாட்டில் ஆளுநர் மாற்றம். வழமையாக இந்த விடயம் இலங்கையின் நோக்கர்களின் கவனத்திற்கு உரியதன்று. ஆனால் இம்முறை அப்படியல்ல. அந்த நியமனம் பலரையும் இவ்விடயத்தின்பால் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது.

ரவீந்திர நாராயண ரவி என்ற முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரிகளில் ஒருவர் தமிழகத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். கடந்த இரண்டு ஆண்டுகளாக நாகலாந்து ஆளுநராக இருந்தவர் அவர்.

இந்த நியமனம் வெறும் அரசியல் பின்புல நோக்கம் கொண்டது மட்டுமல்ல, அதையும் தாண்டி பாதுகாப்பு நிலைவரம் தொடர்பான நியமனமும் கூட என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் ரவீந்திர நாராயண ரவி இந்தியப் பாதுகாப்புத் துறையில் மிக முக்கிய புள்ளி. இந்தியாவின் புலனாய்வுப் பிரிவு எனப்படும் ஐ.பியின் முக்கிய அதிகாரியாகப் பணியாற்றியவர். கேரளாவில் மட்டும் இருபது ஆண்டுகள் பணிபுரிந்து இருக்கின்றார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால். இந்திய அமைச்சரவையில் இடம்பெறும் அமைச்சருக்கு உரிய அந்தஸ்துள்ள பதவி இது. இந்தியாவில் போரையும் சமாதானத்தையும் தீர்மானிக்கும் அதிகாரம் கொண்ட பதவி. அப்பதவியில் இருக்கும் அஜித் டோவால் ஐ.பி. எனப்படும் புலனாய்வுப் பிரிவுத் தலைவராக இருந்த காலத்தில் அவருக்கு அடுத்து, அவருக்கு மிகவும் நம்பிக்கைக்கு உரியவராகச் செயற்பட்டவர் ரவீந்திர நாராயண ரவி.

2019 முதல் இந்தியாவின் உள்நாட்டு, வெளிநாட்டு புலனாய்வு பிரிவுகளை – 'றோ' உட்பட அனைத்துப் பிரிவுகளையும் நேரடியாக நிர்வகிக்கும் தேசியப் பாதுகாப்புத் துணை ஆலோசகர் பணியில் இருந்தவர். காஷ்மீர், நாகலாந்து போன்ற பயங்கரவாத பிரச்சினைக்குரிய மாநிலங்களில் உயர் பாதுகாப்பு அதிகாரியாக செயற்பட்டு அம்மாநில விடயங்களைக் கையாண்டவர்.

1997 முதல் நாகலாந்தில் ஆயுதம் தாங்கிய தீவிரவாதக் கிளர்ச்சிகளை நடத்திவந்த புரட்சித் தரப்புகளோடு இந்திய மத்திய அரசு பல சமரச முயற்சிகளை – சமாதான எத்தனங்களை மேற்கொண்டது. அவை வெற்றியளிக்காத நிலையில் நாகலாந்து கிளர்ச்சியாளர்களைக் கையாளும் முழுப்பொறுப்பும் இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. வரலாற்று சிறப்புமிக்க நாகாலாந்து அமைதி உடன்பாட்டை இந்திய பிரதமர் மோடி முன்னி லையில் வெற்றிகரமாக ஒப்பேற்றியவர் இந்த ரவீந்திர நாராயண ரவி.

அதன் பின்னர் இரண்டு ஆண்டுகள் நாகலாந்து ஆளுநராக இருந்தவர். இப்போது அங்கிருந்து தமிழகத்திற்கு அனுப்பப்பட்டு இருக்கின்றார்.

பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவாலுக்கு நெருங்கிய நம்பிக்கைக்குரிய ஒருவரை, அதுவும் தேசிய பாதுகாப்புக்கான துணை ஆலோசகர் மட்டத்தில் பணியாற்றிய ஒருவரை, தமிழ்நாட்டுக்கான அடுத்த ஆளுநராக மோடி அரசு அனுப்பி இருக்கின்றமை விசேட கவனிப்புக்குரிய விடயமாகின்றது. ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் மீளெழுச்சியும், அவர்களின் வலிமையும் உலகெங்கும் பலத்த அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றது. சர்வதேச நாடுகள் பலவற்றிலும் இஸ்லாமிய இளைஞர்கள் மத்தியில் பிழையான சமிக்ஞையை – உணர்வெழுச்சியை – கருத்து நிலைப்பாட்டை – இது கிளப்பி இருப்பதாகக் கருதப்படுகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டு இருப்பது கவனிக்கத்தக்கது.

இந்தியாவின் தென்முனையில், அதன் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கருதப்படும் சமயத்தில், இந்தியப் பாதுகாப்புத்துறையின் முக்கிய பிரமுகர் ஒருவர் தமிழகத்தின் ஆளுநராக பொறுப்பேற்று இருக்கின்றார். இந்தியாவின் தென் மாநிலங்களில் மட்டுமல்ல, கடல் கடந்தும் கூட வரக்கூடிய பாதுகாப்பு ஆபத்துக்களை கையாள்வது குறித்துப் புதுடில்லி சிரத்தையும் கவனமும் கொண்டுள்ளது என்பதையே இந்நியமனம் காட்டுகின்றது.

இந்த நியமனத்தின் மேலும் பின்புலத் தகவல்கள் விரைவில் வெளிவரும் என எதிர்பார்க்கலாம்.

# பொருளாதார வீழ்ச்சியை தவிர்க்க திணைக்கள மாற்றம் தீர்வாகாது

## மைத்திரிபால 'அட்வைஸ்'



ஒருவரை மாற்றுவதன் மூலம் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை சரி செய்ய முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

நீண்ட கால கொள்கைத் திட்டம் செயற்படுத்தப்பட்டால் மாத்திரமே நாட்டை முன்னேற்ற முடியும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர், மத்திய வங்கியின் ஆளுநர் நியமனம் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு பொருளாதார நிபுணத்துவம் கொண்டவர்கள் நியமிக்கப்படுவதன் காரணமாக அந்த நியமனம் குறித்து மாற்றுக்கருத்துகளை குறிப்பிட முடியாது.

பல்வேறு காரணிகளினால் பொருளாதாரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளன. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலைமைக்கு அமைய பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை ஓரிரு நாள்களில் சீர் செய்ய முடியாது.

நீண்டகால கொள்கைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய செயற்திட்டம் வகுக்கப்பட வேண்டும். பொருளாதாரம், சுகாதாரம், அரசியல் என அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய வகையில் பலமான கொள்கை வகுக்கப்பட வேண்டும்.

பொருளாதாரக் கொள்கை ஆட்சிமாற்றத்துக்கு அமைய மாற்றமடைவதால் சிறந்த முன்னேற்றத்தை அடைய முடியாதுள்ளது. நிலையாக கொள்கைதிட்டம் வகுக்காமல் நாட்டை ஒருபோதும் முன்னேற்றமுடியாது. - எனக் கூறினார்.

# வீட்டு சுவர் பிரச்சினை; ஒருவர் கோரக் கொலை

பலாங்கொடை பொலிஸ் பிரிவில் வெலேகும்புர, மெதகந்த பிரதேசத்தில் கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நபரொருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் வெலேகும்புர பகுதியில் அமைந்துள்ள வீடொன்றின் சுவர் தொடர்பில் ஏற்பட்ட தகராறில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது. இவ்வாறு உயிரிந்த நபர் 59 வயதுடைய வெலேகும்புர - மெதகந்தவத்த பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸ்ஊடகப்பிரிவுமேலும்தெரிவித்துள்ளது.

# கொடிய நோயிலிருந்து விடுபட மாபெரும் யாக சாந்தி பூசை

## கிளிநொச்சியில் நேற்று நடந்தது

கிளிநொச்சி-கிருஸ்ணர் ஆலயத்தில் கொடிய நோயிலிருந்து விடுபட மாபெரும் யாக சாந்தி பூசை நடத்தப்பட்டது.

அதாவது, கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து நாடும் மக்களும் விடுபட வேண்டுமென்ற நோக்கத்தில் கிளிநொச்சி அருள்மிகு கிருஸ்ணர் ஆலயத்தில் யாக சாந்தி பூசை நடத்தப்பட்டுள்ளது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி முதல் 11 மணிவரை இந்த யாக பூசை உரிய சுகாதார முறைப்படி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கடுமையாக தாக்கப்பட்டு ஒருவர் மஹியங்கனையில் படு கொலை

மஹியங்கனை பொலிஸ் பிரிவில் மொரகெட்டிய பிரதேசத்தில் கடுமையாக தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நபரொருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடும் இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த நபர் 59 வயதுடைய மொரகெட்டிய, வேவத்த பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களில் ஒருவர் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

மஹியங்கனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர் அடையாளம்!

நாட்டில் கடந்த 9 மாத காலப்பகுதியில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாடு முழுவதும் 12 ஆயிரத்து 102 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளது.

இதில் சுமார் 39.8 வீதமான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கொழும்பு கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் இருந்து 4 ஆயிரத்து 828 டெங்கு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. இதேவேளை, அதிக எண் ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் மட் டக்களப்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர் எனவும் அங்கு பதிவாகிய மொத்த நோயாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 994 பேர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மியன்மார் இராணுவத்திற்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் மோதல்

## 20 பேர் உயிரிழப்பு




மியன்மார் இராணுவத்திற்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நேற்று திடீரென இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் 20 பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர். இதனையடுத்து, மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டங்களில் இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் இதுவரை ஆயிரத்து 58 பேர் உயிரிழந்துள்ளனர்.

மியன்மார் நாட்டில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் முறைகேடு நடைபெற்றதாக கூறி கடந்த பெப்ரவரி முதலாம் திகதி ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவம், நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி உள்ளிட்ட முக்கிய தலைவர்களை கைது செய்தது.

இதனைத் தொடர்ந்து இராணுவ ஆட்சிக்கு எதிராக அங்கு மாபெரும் போராட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை இராணுவ ஆட்சிக்கு எதிராக பல்வேறு கிளர்ச்சியாளர்கள் குழுக்களும் உருவாகியுள்ளன. இந்த குழுக்களுக்கும் இராணுவத்திற்கும் இடையே அவ்வப்போது மோதல் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பிரித்தானியா நோக்கி பயணித்த 126 அகதிகள் மீட்பு

ஆங்கில கால்வாய் ஊடாக பிரித்தானியா நோக்கி சட்டவிரோதமாக பயணம் செய்த 126 அகதிகள் மீட்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, Pas-de-Calais கடற்கரையில் இருந்து இவர்கள் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் இவர்கள் மூன்று தற்காலிக படகுகளில் மிகவும் ஆபத்தான பயணத்தை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முதலாவது படகு Dunkerque இல் இருந்து புறப்பட்டுள்ளது. இதில் ஆறு பெண்கள், இரண்டு சிறுவர்கள் மற்றும் இரண்டு கைக்குழந்தைகள் உட்பட மொத்தம் 43 பேர் பயணித்துள்ள நிலையில், அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டனர்.

அதேபோல இரண்டாவது படகில் 43 பேரும் மூன்றாவது படகில் 40 பேரும் என மொத்தமாக 126 பேர் மொத்தமாக மீட்கப்பட்டுள்ளனர். பாது கலேயில் இருந்து இவ்வருடத்தில் மாத்திரம் 16 ஆயிரம் பேர் பிரித்தானியா நோக்கி படகில் பயணித்துள்ளனர் என பிராந்திய கடற்படை அதிகாரி தெரிவித்துள்ளார்


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 02 - 09 - 1937

மறைவு 10 - 09 - 2021

அமரர் கந்தசாமி குலசிங்கம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் கெருடாவில், தொண்டைமானாறு)

எமது பாடசாலை ஆசிரியர் திரு. குணசேகரம் மணிவண்ணன் அவர்களின் பாசமிகு பெரியப்பா திரு. கந்தசாமி குலசிங்கம் அவர்கள் 10-09-2021 அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஆசிரிய நண்பர்கள்,
மு/ குரவில் தமிழ் வித்தியாலயம்
குரவில், உடையார்கட்டு.




## கிரீஸில் கட்டாயத் தடுப்பூசிக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம்

கிரீஸ் அரசின் அனைவருக்கும் கட்டாய கொரோனா தடுப்பூசி உத்தரவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடந்த போராட்டத்தில் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் வெடித்துள்ளது. கிரீஸ் அரசின் கட்டாய தடுப்பூசி உத்தரவை கடைப்பிடிக்காத சுமார் 6 ஆயிரம் சுகாதார முன்களப் பணியாளர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில், Thessaloniki நகரத்தில், கிரீஸ் பிரதமர் Kyriakos Mitsotakis கலந்து கொண்ட நிகழ்ச்சி நடந்த வளாகத்தை நோக்கி சென்ற சுமார் 2 ஆயிரத்து 500 போராட்டக்காரர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

அத்தோடு, அவர்கள் மீது கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், தண்ணீர் புகை வீசியும் போராட்டக்காரர்களை அங்கிருந்து வெளியேற்றினர்.

## செப். 11 தாக்குதலில் உயிரிழந்த தீயணைப்பு வீரர்களுக்கு அஞ்சலி



அமெரிக்காவில், இரட்டை கோபுரத் தாக்குதலில் உயிர்த்தியாகம் செய்த தீய ணைப்பு வீரர்களுக்கு புளோரிடா மாகணத் தீயணைப்பு துறையினர் 110 படிகட்டுகள் ஏறிச் சென்று அஞ்சலி செலுத்தினர்.

2001ஆம் செப்டெம்பர் 11ஆம் திகதி இரட்டை கோபுரங்கள் மீது பயங்கரவாதிகள் விமானங்களால் மோதினர்.

அப்போது மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த 340 தீயணைப்பு வீரர்களும் 60 பொலிஸாரும் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தனர்.

அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக தீயணைப்பு வீரர்கள் அனைத்து பாதுகாப்பு உபகரணங்களையும் ஏந்தியபடி 110 படிகட்டுகள் ஏறிச் சென்று அஞ்சலி செலுத்தினர்.



# அசாமில் சட்டவிரோதமாக தங்கியிருந்த மியன்மார் நாட்டினர் 26 பேர் கைது

இந்தியாவின் அசாம் மாநிலத்தின் கவுகாத்தி மாவட்டம் ரஹ்பரி பகுதியில் வெளிநாட்டைச் சேர்ந்த சிலர் சட்டவிரோதமாகதங்கி இருக்கின்றனர்என பொலிஸாருக்கு இரகசியத்தகவல் கிடைத்ததையடுத்து, அந்தப் பகுதியில்உள்ளவிடுதியொன்றில்சோதனைநடத்தப்பட்டது. அந்தச் சோதனையில் சந்தேகத்திற்கிடமான வகையில் தங்கியிருந்த 10 பெண்கள் உள்பட 26 பேரிடம் பொலிஸார் விசாரணை நடத்தினர்.

விசாரணையில் அந்த 26 பேரும் மியன்மார் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதையும் அவர்கள் சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்து தங்கி இருப்பதையும் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

அவர்கள் அனைவரும் போலியாகத் தயாரித்து வைத்திருந்த இந்திய ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை போன்ற பல்வேறு ஆவணங்களையும் பொலிஸார் கைப்பற்றினர். இதையடுத்து, சட்டவிரோதமாக அங்கே தங்கியிருந்த மியன்மார் நாட்டினர் 26 பேரையும் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் கைது செய்யப்பட்ட 26 பேரும் அசாமிலிருந்து டெல்லி செல்ல திட்டமிட்டிருந்ததும் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# இதுவரையில் 54.3 கோடி பேருக்கு இந்தியாவில் கொரோனாப் பரிசோதனை




இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவல் ஏற்ற இறக்கமாக உள்ள நிலையில், வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் அதற்கான பரிசோதனை முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது. பரிசோதனையைத் தொடர்ந்து அதிகரித்து, வைரஸ் பாதிக்கப்பட்டோருக்கு உரிய சிகிச்சை அளிக்கும் நடவடிக்கையில் மத்திய, மாநில அரசுகள் ஈடுபட்டு வருகின்றன.

இந்தநிலையில், இந்தியாவில் இதுவரை செய்யப்பட்ட கொரோனா பரிசோதனையில் எண்ணிக்கை 54.3 கோடியாக உள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி மையத்தினால் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியா முழுவதும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட கொரோனாப் பரிசோதனை எண்ணிக்கை 54 கோடியே 30 லட்சத்து பதினான்காயிரத்து எழுபத்தாறு என்றும், குறிப்பாக, நேற்று முன்தினம் ஒரேநாளில் மேற்கொள்ளப்பட்ட கொரோனாப் பரிசோதனைகளின் எண்ணிக்கை 12 லட்சத்து எட்டாயிரத்து 247 ஆகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## காங்கிரஸ் ஆட்சியில் 70 ஆண்டுகளாக உருவாக்கியதை பா.ஜ.க. ஏழே ஆண்டுகளில் விற்றதாக ராகுல் விமர்சனம்

புல்வாமா தாக்குதல் நடந்தபோது இந்தியப் பிரதமர் மோடிக்கு எதிராக எந்த ஊடகமும் கேள்வி எழுப்பவில்லை என்று ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

இந்தியகாங்கிரஸ்கட்சியின் மாணவர் பிரிவான இந்திய தேசிய மாணவர் கூட்டமைப்பின் தேசிய செயற்குழுக் கூட்டம் டெல்லியில் நடைபெற்றுள்ளது. இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் எம்.பி.ராகுல் காந்தி கலந்துகொண்டு உரையாற்றினார். 'பிரதமர் மன்மோகன் சிங் ஆட்சியின்போது மும்பையில் பயங்கரவாதத் தாக்குதல் நடந்தது.

அந்தத்தாக்குதலுக்குப்பின் மன்மோகன் சிங்கை பலவீனமான பிரதமர் என்று ஊடகங்கள் கடுமையாக விமர்சித்தன. ஆனால், புல்வாமா தாக்குதல் நடந்தபோது பிரதமர் மோடிக்கு எதிராக எந்த ஊடகமும் பேசவில்லை.

காங்கிரஸ் கட்சி கடந்த 70 ஆண்டுகளாக நாட்டுக்காக பல்வேறு கட்டமைப்புகளை உருவாக்கியுள்ளது. 70 ஆண்டுகளில் உருவாக்கப்பட்டவற்றை பா.ஜ.க. கடந்த ஏழே ஆண்டுகளில் விற்றுவிட்டது. பா.ஜ.க. தலைமையிலான அரசின் செயல்பாடுகள் குறித்து ஊடகங்கள் ஏதும் கேள்வி கேட்காமல் மௌனமாக இருக்கின்றன. ஆனால், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஆட்சியில் தொடர்ந்து ஊடகங்கள் விமர்சித்துவந்தன. அதற்கு முரணாக ஊடகங்கள் இப்போது செயல்படுகின்றன என்று அவர் தனது உரையில் தெரிவித்திருக்கிறார்.

# சமையல் எண்ணெய்களுக்கான இறக்குமதி வரிகள் குறைக்கப்பட்டன

இந்தியா அதிகமாக இறக்குமதி செய்யும் பொருள்களின் பட்டியலில் கச்சா எண்ணெய், தங்கம் ஆகியவற்றை தொடர்ந்து மூன்றாவது இடத்தில் இருக்கும் சமையல் எண்ணெய்களுக்கான உள்நாட்டுச் சில்லறை விலையைக் குறைக்கும் பொருட்டு, அவற்றுக்கான இறக்குமதி வரியைக் குறைக்க இந்திய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதனடிப்படையில், கச்சா பாம் ஒயிலுக்கான இறக்குமதி வரி 10 சதவீதத்தில் இருந்து 2.5 சதவீதமாகவும், கச்சா சோயா எண்ணெய் மற்றும் கச்சா சூரியகாந்தி எண்ணெய்க்கான இறக்குமதி வரிகள் 7.5 சதவீதத்தில் இருந்து 2.5 சதவீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக இந்திய மத்திய நிதியமைச்சகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இந்த நடவடிக்கை காரணமாக இந்தியாவில் இந்த எண்ணெய்களின் சில்லறை விலை லீற்றருக்கு 4 அல்லது 5 ரூபா வரை குறையலாம் என இந்தச் சங்கத்தின் நிர்வாக இயக்குநர் மேத்தா கூறியுள்ளார்.

ஆனால், இறக்குமதி வரியை இந்தியா குறைத்த பின்னர் சர்வதேசச் சந்தையில் இந்த எண்ணெய்களின் விலைகள் அதிகரித்து வருகின்றன எனவும், இதனால் இந்த வரிக் குறைப்பின் உண்மையான தாக்கம் 2 ரூபா அல்லது 3 ரூபாவாக மட்டுமே இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.





### உத்தரப்பிரதேசத் தேர்தலில்

## 100 தொகுதிகளில் சிவசேனா போட்டி

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் அடுத்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. தற்போது அங்கு பா.ஜ.க. ஆட்சி நடைபெற்று வரும் நிலையில், பா.ஜ.கவை வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்ற பிரதான எதிர்க்கட்சிகள் தற்போது தேர்தல் பணியைத் தொடங்கிவிட்டன.

இந்த நிலையில், உத்தரப் பிரதேச சட்டமன்றத் தேர்தலில் 100 தொகுதிகள் வரை போட்டியிடவுள்ளதாக சிவசேனா கட்சி தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான சஞ்செய் ராவத், உத்தரப் பிரதேசத்தில் மொத்தமுள்ள 403 தொகுதிகளில் 100 தொகுதிகள் வரை நாங்கள் போட்டியிடத் திட்டமிட்டுள்ளோம். கோவாவை பொறுத்தவரை 20 தொகுதிகள் வரை நாங்கள் போட்டியிடவுள்ளோம். அங்கு கூட்டணி அமைத்துத் தேர்தலைச் சந்திக்கவும் திட்டமிட்டுள்ளோம், என்று கூறியிருக்கிறார்.

# சாய்ந்தமருதில் கொரோனா பரிசோதனை



சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யூ.எல்.எம்.நியாஸின் வேண்டுகோளுக்கிணங்க சாய்ந்தமருது பிரதேசத்தில் அத்தியாவசிய தேவையின்றி வெளியிறங்கிய நபர்கள் மீது பாதுகாப்பு துறையினரும் சுகாதாரத் துறையினரும் பி.சி.ஆர். நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட ஊரடங்கு அமுலில் இருக்கும் போது தொற்றாளர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்து வரும் சந்தர்ப்பத்தில் வீதியில் தக்க காரணங்களின்றி உலாவித் திரிந்தவர்களின் மீது இந்த பி.சி.ஆர். நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு மதிப்பளித்து கொரோனா நோயினை கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்குங்கள் என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மக்களை பகிரங்கமாக கேட்டுக்கொண்டது.

இந்த செயலுக்கு சமூக வலைத்தளங்களில் ஆதரவும், எதிர்ப்பும் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

பி.சி.ஆர். பரிசோதனைக்கு ஆளான பலரும் அத்தியாவசிய தேவைக்கு தாங்கள் வெளியேறிய போது அனுமதி அட்டைகளை காட்டியும் அதனை கவனத்தில் கொள்ளாது பாதுகாப்பு படையினரை முன்னிலைப் படுத்தி தங்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்ததாகவும், உள்வீதியில் இவ்வகையான பரிசோதனைகளை செய்வதாகவும் குற்றம்சாட்டி சமூக வலைத்தளங்களில் எழுதி வருகின்றனர்.

குறித்த சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய சுகாதாரப் பணியாளர்கள் கொரோனாவை கட்டுப்படுத்த பிந்திய இரவு நேரம் வரை அர்ப்பணிப்பு டன் சாய்ந்தமருது பிரதேசத்தில் சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கடலில் குளிக்கச்சென்ற 15வயதான சிறுவன் சாவு

மட்டக்களப்பு –ஏறாவூர் புன்னக்குடா கடலில் குளிக்கச்சென்ற 15வயதான சிறுவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஏறாவூர் தைக்கா வீதியைச் சேர்ந்த – ரமீஸ் சஜாத் என்பவரே தனது ஐந்து நண்பர்களுடன் கடலில் குளித்த போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உயிரிழந்தவரின் சடலம் பிரேதப் பரிசோதனைகளுக்காக ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




# மாவடிப்பள்ளி மக்கள் குடியிருப்பில் யானைகள் புகுந்து அட்டகாசம்

அம்பாறைமாவட்டத்தின்சம்மாந்துறை,மாவடிப்பள்ளி வீட்டு குடியிருப்புகளை நோக்கி ஊடுருவிய காட்டு யானைகளின் நடமாட்டத்தினால் பிரதேசவாசிகள் அச்சமடைந்துள்ளனர். காரைதீவு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாவடிப்பள்ளி மக்கள் குடியிருப்பு பிரதேசத்தில் இன்று அதிகாலை யானைகளின் அட்டகாசத்தினால் வீட்டு மதில்கள் மற்றும் பயிர்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் இரவு நேரங்களில் அச்சம் நிலவிவருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

யானைகளின் அட்டகாசத்தினால் வாழை,தென்னை முதலான பயிர்கள் அதிகமாக சேதமாக்கியுள்ளது டன் வீட்டில் தங்கியிருந்த மக்கள் தெய்வாதிகமாக உயிர்தப்பியுள்ளனர்.மேலும் ஊடுருவும் காட்டு யானைகள் அயலிலுள்ள காடுகளுக்குள் இருந்து குறித்த பகுதி கிராமங்களுக்குள் இன்று அதிகாலை மாவடிப்பள்ளி கிராமங்களுக்குள் வந்து சேதம் விளைவித்து வந்ததாக மக்கள் தெரிவித்தனர்.

இக் காட்டு யானைகள் ஊருக்குள் ஊடுருவுவதைத் தடுப்பதற்காக ஊர்ப் பகுதியைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள சில யானை தடுப்பு மின்சார வேலிகள் செயலிழந்துள்ளதுடன் ஊடுருவியுள்ள காட்டு யானைகள் கூட்டம் வீட்டு மதிலினை உடைத்து சேதம் விளைவித்ததோடு பயன்தரும் பயிர்களையும் மரங்களையும் துவம்சம் செய்து சென்றுள்ளன. காட்டு யானைகள் ஏற்படுத்தும் சேதம் தொடர்பாக கிராம சேவையாளரிடமும் பொலிஸாரிடமும் கிராம மக்கள் அறிவித்துள்ளோம் எனத் தெரிவித்தனர்.



# வீதிகளில் நடமாடிய மூவருக்குத் தொற்று

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் சனிக்கிழமை ஊரடங்குச் சட்டத்தை மீறி வீதியில் நடமாடிய 17 பேருக்கு மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையின் பெறுபேறுகள் அடிப்படையில் மூவருக்கு கொவிட் 19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மற்றைய அனைத்துப் பரிசோதனை முடிவுகளும் கொரோனாத் தொற்றை உறுதிப்படுத்தவில்லை. மேலும் இதன்போது 20 பி.சி.ஆர். மாதிரிகளும் எடுக்கப்பட்டன என காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வஸீர் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் வேண்டுகோளுக்கிணங்க சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்லீமா வஸீரின் தலைமையில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பாதுகாப்பு படையினர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நுளம்பு கள தடுப்பு பிரிவினர், இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பு அன்டிஜன் பரிசோதனையின் போதே இந்த பொறுபேறு கள் கிடைக்கப் பெற்றுள்ளன. எனவே மக்கள் அத்தியாவசிய தேவையை தவிர வீணாக வெளியில் வரவேண்டாம் என காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வசீர் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.



# மதிலில் மோதி தடம்புரண்டது செங்கல் ஏற்றிய பாரவூர்தி

நயினாகாட்டிலிருந்து செங்கல் ஏற்றிவந்த டிப்பர் லொறியொன்று விபத்துக்குள்ளானதில் பாரியசேதம் ஏற்பட்டது. இச்சம்பவம் காரைதீவு பிரதானவீதியில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.

நயினாகாட்டிலிருந்து கல்முனை நோக்கி செங்கல் ஏற்றிக்கொண்டு வந்து கொண்டிருக்கையில் காரைதீவு கந்தசுவாமி ஆலய முன்னாலுள்ள பிரதான வீதியில் வைத்து திடீரென டயர் வெடித்து இவ்விபத்து சம்பவித்துள்ளது.

திடீரென டயர் வெடித்த காரணத்தினால் வேகமாகவந்த லொறி ஆலயத்திற்கு முன்னாலுள்ள வீட்டு மதிலில் மோதி தடம்புரண்டது. மதில் சுக்குநூறாக உடைந்தது. ஏற்றிவந்த செங்கல் அனைத்தும் வீதியில் சிதறியது. எனினும் யாருக்கும் உயிரிழப்பு ஏற்படவில்லை. காரைதீவுப்பொலிஸார் குறித்த இடத்துக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# இரண்டாவது ரி-20 யிலும் இலங்கை தோல்வி தொடரைக் கைப்பற்றியது தென்னாபிரிக்கா



இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது ரி-20 போட்டியில் தென்னாபிரிக்கா அணி 9 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை 2-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா கைப்பற்றியுள்ளது.

கொழும்பு- ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சைச் சமாளிக்க முடியாது தடுமாறிய இலங்கை அணி, 18.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 103 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. குசல் பெரேரா 30 ஓட்டங்களையும் பானுக ராஜபக்ஷ 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். தென்னாபிரிக்க அணியின் மார்க்ரம் மற்றும் சம்ஸி ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் போர்ச்சுன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

104 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 14.1 ஓவர்கள் நிறைவில் ஒரேயொரு விக்கெட்டை மட்டும் இழந்து வெற்றி இலக்கைக் கடந்தது.

குயின்ரன் டி கொக் 58 ஓட்டங்களையும் ஹெய்டன் மார்க்ரம் 21 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றுக்கொண்டனர். இலங்கை அணியின் வனிந்து ஹசரங்க வீழ்த்தப்பட்ட விக்கெட்டினை கைப்பற்றியிருந்தார்.

இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக ஹெய்டன் மார்க்ரம் தெரிவுசெய்யப்பட்டார். இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான போட்டி நாளை நடைபெறவுள்ளது.



அமெரிக்க பகிரங்க டென்னிஸில் முதல் முறையாக

# சம்பியன் பட்டம் வென்றார் டேனில் மெட்வடேவ்

அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் டேனில் மெட்வடேவ் சம்பியன் பட்டத்தை வென்றார்.

இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் டேனில் மெட்வடேவ், உலகின் முதல்நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சை எதிர்கொண்டார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப்போட்டியில், மிகச் சிறப்பாக விளையாடிய மெட்வடேவ், 6-4, 6-4, 6-4 என்ற நேர் செட்களில் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வகையில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தன தாக்கிக்கொண்டார். இது டேனில் மெட் வடேவின் முதல் கிராண்ட்ஸ்லாம் சம்பியன் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற ரஷ்யர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

இந்த ஆண்டு நடைபெற்ற ஆஸ்திரேலிய ஓபன், பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன் ஆகிய கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள ஜோகோவிச், அமெரிக்க ஓபன் பட்டத்தையும் வென்று, கலண்டர் ஸ்லாம் பட்டத்தையும் வெல்லக்கூடும் என்ற எதிர்பார்ப்பு அதிகமாக இருந்த நிலையில், அந்தச் சாதனை வாய்ப்பு அவரிடமிருந்து கைநழுவிப் போனது. பெடரர், நடால், ஜோகோவிச் ஆகிய மூவரும் தலா 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள நிலையில் அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரில் பட்டம் வென்று இருவரையும் முந்தும் ஜோகோவிச்சின் முயற்சியும் தோல்வியில் முடிந்தது.

# இத்தாலியன் கிராண்ட் பிரிக்ஸில் முதலிடத்தைப் பிடித்தார் டானியல்



போர்முலா-1 கார் பந்தயத்தொடரின் இத்தாலியன் கிராண்ட் பிரிக்ஸ் சுற்றில் மக்லரன் அணியின் டானியல் ரிச்சியார்டோ முதலிடம் பிடித்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் 23 சுற்றுகளாக ஒவ்வொரு நாடுகளில் நடைபெறும் போர்முலா-1 தொடரின் இந்த வருடத்துக்கான 14 ஆவது சுற்றான இத்தாலியன் கிராண்ட் பிரிக்ஸ், நேற்று மொன்சா சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது. இதில் 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் பங்குபற்றினர்.

மக்லரன் அணியின் டானியல் ரிச்சியார்டோ, 306.72 கிலோ மீற்றர் பந்தயத் தூரத்தை 1 மணித்தியாலம் 21 நிமிடங்கள் 54.365 வினாடிகளில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார்.

இதற்காக அவருக்கு 27 புள்ளிகள் வழங்கப்பட்டன. அவரை விட 1.747 வினாடிகள் பின்தங்கிய மக்லரன் அணியின் இன்னொரு வீரரான லெண்டோ நோரிஸ் இரண்டாவது இடத்தையும் அதற்கான 18 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டார்.

4.921 வினாடிகள் பின்தங்கிய நிலையில் பந்தயத் தூரத்தைக் கடந்த, மெர் சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான வோல்ட்டெரி போட்டஸ் மூன்றாமிடத்தைப் பிடித்தார். அவருக்கு 18 புள்ளிகள் வழங்கப்பட்டன.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள பதினொரு சுற்றுகளின் முடிவில், ரெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டபன் ஏழு வெற்றிகளுடனும் 226.5 புள்ளிகளோடும் முதலிடத்தில் உள்ளார். மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லூயிஸ் ஹமில்டன், நான்கு வெற்றிகளுடன் 221.5 புள்ளிகளையும் பெற்று இரண்டாமிடத்திலிருக்கிறார். மெர்சிடஸ் பென்ஸ் அணியின் மற்றொரு வீரரான வோல்ட்டெரி போட்டஸ், 141 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலுள்ளார்.

பதினைந்தாவது சுற்றான ரஷ்யன் கிராண்ட் பிரிக்ஸ், வரும் 26 ஆம் திகதி ரஸ்யாவின் சோச்சி சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது.

# பதவி விலகுகிறார் விராட் கோலி அடுத்த தலைவர் ரோஹித் சர்மா?



இந்திய கிரிக்கெட் அணியின் அனைத்து வடிவிலான போட்டிகளுக்கும் தலைவராக இருந்து வரும் விராட் கோலி, விரைவில் ஒருநாள் போட்டிக்கான அணித்தலைவர் பொறுப்பிலிருந்து விலகவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

தனது துடுப்பாட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்தும் நோக்கில் விராட் கோலி இந்த முடிவினை எடுக்கவிருக்கிறார் என பிரபல இந்திய ஆங்கில நாளிதழான டைம்ஸ் ஒப் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது. ஒருநாள் போட்டிக்கான அணித் தலைவர் பொறுப்பு ரோஹித் சர்மாவுக்கு வழங்கப்படவிருப்பதாகவும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை (பி.சி.சி.ஐ.) வட்டாரங்கள் குறிப்பிட்டதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில், டெஸ்ட் மற்றும் ரி-20 போட்டிகளுக்கான அணித்தலைவர் பொறுப்பில் விராட் கோலி தொடர்ந்து நீடிப்பார் எனவும் தகவல்கள் கூறுகின்றன. ஒக்டோபர்-நவம்பர் மாதத்தில் நடைபெறும் ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்குப் பின்னர் தனது பதவி விலகல் முடிவை விராட் கோலி அறிவிக்கவிருக்கிறார் எனவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

33 வயதாகும் விராட் கோலி உலகின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக விளங்கி வருகிறார்.

மூன்று வடிவிலான போட்டிகளுக்கும் அணியின் தலைவராக இருப்பதால் ஏற்பட்டிருக்கும் பணிச்சுமையைக் குறைக்கும் வண்ணம் விராட் கோலி, ஒருநாள் போட்டிக்கான கப்டன் பொறுப்பைத் துறக்கும் முடிவை எடுத்திருக்கலாம் என்று தெரிகிறது. விராட் கோலி தலைமையில் இந்திய அணி 95 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடி 65 இல் வெற்றியும் 27 இல் தோல்வியும் அடைந்துள்ளது. ஒரு போட்டி சமநிலையில் முடிந்துள்ளது. 2 போட்டிகளில் முடிவு பெறப்படவில்லை.

# வெளிநாட்டு உள்ளாடைகள் அவசியமா? சிந்திக்கும்படி கோருகின்றார் அங்கஜன்!

## வருமானத்துக்குள்ளேயே செலவு வேண்டுமென அவர் 'அட்வைஸ்'




இலங்கையிலும் உள்ளாடைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த நிலையில் வெளிநாட்டு உள்ளாடைகளை வாங்குவது தொடர்பாக சற்றுச் சிந்திக்க வேண்டும். எங்களுடைய நாட்டின் பொருளாதார நிலையை கணக்கிலெடுத்து வருமானத்துக்கு உள்ளேயே செலவுகள் இருக்க வேண்டுமென யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இன்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அவசரகாலச்சட்டம் என்பது எங்களைப் பாதுகாப்பதற்காகவே கொண்டுவரப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். கொரோனா பலவிதமான பாதிப்புகளை உலகத்தில் ஏற்படுத்தி இருக்கின்றது. அதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. எந்தவிதமான அடிப்படை மனித உரிமை மீறலும் இங்கு இல்லை.

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கே வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.


ஒரு சில பொருள்களுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்றது. இதை வைத்துக் கொண்டு சில ஊடகங்களும் சமூக வலைத்தளங்களும் பிழையான தகவல்களை வெளியிடுகின்றன.

இலங்கையிலும் உள்ளாடைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த நிலையில் வெளிநாட்டு உள்ளாடைகளை வாங்குவது தொடர்பாகச் சற்று சிந்திக்க வேண்டும். எங்களுடைய நாட்டின் பொருளாதார நிலையை கணக்கிலெடுத்து வருமானத்துக்கு உள்ளேயே செலவுகள் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் கடன் வாங்கி அதனை மீளச் செலுத்த முடியாத நிலை ஏற்படும்.

மேலும் சுரேஷ்பிறேமச்சந்திரன் அண்மையில் தெரிவித்த கருத்து தொடர்பாக கேள்வியெழுப்பப்பட்டபோது, தமிழ் தேசிய அரசியல்வாதிகள் எடுக்கின்ற முயற்சிகளை மழுங்கடிக்க வேண்டும் என்பது எங்களுடைய நோக்கம் அல்ல. இத்தனை வருடமும் ஜெனிவா சென்று இதுவரை மக்களுக்கு கிடைத்தது என்ன?

ஜெனிவாவில் உரிமையை பெற்றுக் கொள்வோம் எனக் கூறி மக்களை ஏமாற்றி செய்து கொண்டிருந்த நாடகத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதே என்னுடைய நோக்கமாக இருந்தது. இதனை நான் சொல்லும் போது அரசாங்கத்துடன் நான் இணைந்து இருக்கிறேன் எனவும் குறிப்பாக என்னுடைய கணக்காளர் போன்று அவர் கூறியிருக்கின்றார். நான் அவரை கணக்காளராக நியமித்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய வருமானம் என்ன என்னுடைய செலவு என்ன என்பது அவருக்குத் தெரியாது என்னுடைய தேர்தல் செலவு என்பது அவருக்கு தெரியாது. எவ்வாறு இதெல்லாம் அவருக்கு தெரியும் என்பது எனக்கு சந்தேகமாக உள்ளது.

இவர் சொல்வதை பார்த்தால் அரசாங்கத்துடன் இணைந்தால் வருமானம் வரும் என்பதால்தான், அவர் முன்னர் மீன்பிடித்துறை அமைச்சின் செயலாளராக இருந்தவரா என்பது எனக்கு தெரியவில்லை. - என்றார்.





## கரவெட்டி மாதா கோவிலில் திருடர்கள் கைவரிசை

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி வீதியில் அமைந்துள்ள மாதா கோவிலில் நேற்று காலை சில பொருள்கள் களவாடப்பட்டுள்ளன எனப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நெல்லியடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கரணவாய் கிழக்கு கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி வீதியில் அமைந்துள்ள மாதா கோவிலடி முன் கேற் பூட்டு உடைக்கப்பட்டு சி.சி.ரி.வி. கமராவிற்கான தொடர்பு துண்டிக்கப்பட்டு, கமரா முறிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் பிரதான மண்டபத்தின் அருகில் அமைக்கப்பட்ட ஆலயப் பொருள்கள் வைக்கப்பட்ட சிறிய அறை உடைக்கப்பட்டு அதனுள் இருந்த அம்ப், பொக்ஸ், மைக் என்பன களவாடப்பட்டுள்ளதுடன் ஆலயத்தின் வெளியில் அமைக்கப்பட்ட களஞ்சிய அறையும் உடைக்கப்பட்டுள்ளது. களவாடப்பட்ட பொருள்களின் விவரம் முழுமையாகத் தெரியவில்லை என முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## விசேட தேவையுடைய தொற்றாளர்களுக்கு சிறப்பு ஏற்பாடுகளை அவசியம் ஏற்படுத்துக!

### சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்தல்

விசேட தேவையுடையோர் கொவிட் தொற்றுக்கு உள்ளான பின்னர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்படும் போதும், இடைநிலை சிகிச்சை நிலையங்களில் அனுமதிக்கப்படும் போதும் அவர்களது அன்றாட தேவைகளை நிறைவு செய்யக் கூடியவாறான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும் என்று இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

சமூகத்தில் நாளாந்தம் இனங் காணப்படுகின்ற கொவிட் தொற்றாளர்களில் விசேட தேவையுடைய மற்றும் அங்கவீனமுடைய பலரும் உள்ளடங்குகின்றனர். இவ்வாறானவர்களில் பெருமளவானோருக்கு தமது அன்றாட கடமைகளை தாமே நிறைவேற்றிக் கொள்ள முடியாது.

எனவே இவ்வாறான தொற்றாளர்களை சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்லும் போதும், வைத்தியசாலைகளில் அனுமதிக்கும் போதும் அவர்களுக்கான அன்றாட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறான தொற்றாளர்கள் வைத்தியசாலைகளில் சேர்க்கப்படும் போது அல்லது இடைநிலை சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படும் போது அவர்களது உதவியாளர்கள் அல்லது உறவினர்களுக்கு அனுமதியளிக்கப்படுவதில்லை.

இதனால் பல மரணங்கள் பதிவாகக் கூடிய வாய்ப்புக்களும் உள்ளன. எனவே இது தொடர்பில் உரிய நடைமுறையொன்றை முன்னெடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் என்று குறிப்பிட்டார்.

## சீனாவின் 2021 எதிர்கால அறிவியல் விருதை வென்றவர்களில் ஒருவராக இலங்கையரும்




2021 ஆம் ஆண்டு எதிர்கால அறிவியல் விருதை வென்றவர்களில் பேராசிரியர் மலிக் பீரிஸும் ஒருவர் என்று கொழும்பிலுள்ள சீனத்தூதரகம் தெரிவித்துள்ளது.

ஹொங்கொங்கின் சிறந்த தொற்றுநோய் நிபுணர்களுள் ஒருவரான பேராசிரியர் யுவன் க்வோக்-யுங் ஆகியோருடன் இணைந்து மலிக் பீரிஸ் இந்த விருதை 10 லட்சம் அமெரிக்க டொலருடன் பெற்றுள்ளார்.

சார்ஸ் மற்றும் கொவிட்-19 போன்ற வளர்ந்து வரும் நோய்களைப் புரிந்துகொள்வதில் அவர்களின் பங்களிப்பு மற்றும் ஆய்வுக்காக இந்த விருது வழங்கப்படவுள்ளது.

இந்த விருது வழங்கும் விழா நவம்பர் 21 ஆம் திகதி பீஜிங்கில் நடைபெறும்.

சீனாவில் அறிவியல் முன்னேற்றங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்காக எதிர்கால அறிவியல் பரிசு 2016 இல் தனியார் நிதியால் நிறுவப்பட்டது.

பேராசிரியர் மலிக் பீரிஸ் ஓர் இலங்கை நோயியல் நிபுணர் மற்றும் வைராலஜிஸ்ட் ஆவார். அவரது ஆராய்ச்சி ஆர்வங்களில் சுற்றுச்சூழல், பரிணாமம், நோய்க்கிருமி உருவாக்கம், விலங்கு-மனித இன்ஃப்ளூயன்ஸா மற்றும் பிற மனித சுவாச வைரஸ் தொற்றுகள், 320 இற்கும் மேற்பட்ட ஆராய்ச்சி வெளியீடுகள் உள்ளன.

Vacancy for Software Developer

WARRANTY SOFT
IT Solutions

A USA-based company with offices in Colombo and Jaffna is looking for candidates for the post of Web Application Developer.

Qualifications:
* Degree in Computing/IT or equivalent experience
* Sound technical & analytical skills
* Good knowledge of programming
* Knowledge in Database Management Systems
* Knowledge in Mobile programming is a plus

Send your CV to siva@monthlywarranty.com

108, K.K.S. Road,
Kokuvil.
Phone No - 021 205 2433

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.09.2021இல் வெளியிடப்பெற்றது.